தீ குறித்த தகவலை வழங்குவது

SCDF The Life Saving Force

National Fire And Civil Emergency Preparedness Council
NFEC

ஆதரவு வழங்குபவர்கள்

People's Association

# நீங்கள் உதவலாம்
# குப்பை குழாய்த் தொட்டியில் ஏற்படும் தீ



தீ பாதுகாப்புள்ள ஒரு அக்கம்பக்கதிற்கு நாம் குப்பை குழாய்த் தொட்டியில் ஏற்படும் தீயை எதிர்கொள்வோம்.


**குப்பை குழாய்த் தொட்டியில் ஏற்படும் தீ சிறியவை; அவை எளிதாக அணைக்கப்படலாம்.**


நீங்கள் 995 எண்ணை **அழைக்கத் தேவையில்லை.** ஏனெனில் குப்பை குழாய்த் தொட்டியில் ஏற்படும் தீ **பரவக்கூடிய ஆபத்தின்றி சிறியவை.** இவ்வகை தீயை குப்பை குழாய்த் **தொட்டியில் தண்ணீர் ஊற்றுவதன் மூலம் அல்லது தண்ணீர் நிரப்பபட்ட பிளாஸ்டிக் பைகளை குப்பை குழாய்த் தொட்டியில் போடுவதன் மூலம்** சுலமபாக அணைக்கலாம்.

குப்பை குழாய்த் தொட்டியில் சாயம், மண்ணெண்ணெய் அல்லது அணைக்கப்படாத தணல் மற்றும் சிகரெட்டு துண்டுகள் போன்ற **தீப்பற்றக்கூடிய** பொருள்களைப் **போடாமல்** இவ்வகை தீ ஏற்படாமல் தடுக்க நீங்கள் உதவலாம்.

உங்கள் அக்கம்பக்கத்தின் குப்பை குழாய்த் தொட்டியில் ஏற்படும் தீயை அணைக்க உதவ **இன்றே சமூக முதல் உதவியாளராக ஆகுங்கள். இதன் வழி, குறைபடயிருக்கும் சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படையின் (SCDF) வளத்தை விடுவி த்து, உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ நீங்கள் எங்களுக்கு துணை புரிகிறீர்கள்.**

**குப்பை குழாய்த் தொட்டியில் ஏற்படும் தீயை அணைக்க இரு வழிகள்**






பிளாஸ்டிக் பையில் தண்ணீரை நிரப்புங்கள்.


பையைக் கட்டி குப்பை குழாய்த் தொட்டிக்குள் போடுங்கள்.


ஒரு சிறு வாளி அல்லது அகப்பையில் தண்ணீரை நிரப்புங்கள்.


அதை குப்பை குழாய்த் தொட்டிக்குள் ஊற்றுங்கள்.

**புகை வருவது நிற்கும் வரை இதில் ஏதெனும் ஒரு முறையை தொடர்ந்து செய்யுங்கள்.**

# அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**(1) குப்பை குழாய்த் தொட்டியில் தீ ஏற்பட்டால் நான் என்ன செய்ய வேண்டும்?**

நீங்கள் குப்பை குழாய்த் தொட்டிக்குள் நீரை ஊற்றி எளிதாக தீயை அணைக்க உதவலாம்.

**(2) குப்பை குழாய்த் தொட்டியில் எரியும் தீயை அணைக்க நான் எவ்வளவு தண்ணீரை ஊற்ற வேண்டும்?**

நீங்கள் பின்வரும் **இரு** முறைகளில் ஒன்றை பின்பற்றலாம்:

***a.*** பிளாஸ்டிக் பையில் தண்ணீரை நிரப்பி, கட்டி பின் குப்பை குழாய்த் தொட்டிக்குள் போடலாம்; ***அல்லது***

***b.*** அகப்பையில் அல்லது ஒரு சிறு வாளியில் தண்ணீரை எடுத்து குப்பை குழாய்த் தொட்டிக்குள் நேரடியாக ஊற்றலாம்.

இதில் எந்த முறையை நீங்கள் பின்பற்றினாலும், குப்பை குழாய்த் தொட்டியின் வாயிலிலிருந்து புகை வருவது நிற்கும் வரை தொடர்ந்து செய்யுங்கள்.

**(3) குப்பை குழாய்த் தொட்டியில் ஏற்படும் தீயை அணைக்க பொது மக்களை ஈடுபடுவதில் ஏதேனும் ஆபத்து உள்ளதா?**

குப்பை குழாய்த் தொட்டியில் ஏற்படும் தீ பொதுவாக பரவக்கூடிய ஆபத்தின்றி வெறும் புகையும் தன்மை கொண்ட சிறு தீயே. ஒவ்வொரு ஆண்டும், 20% குப்பை குழாய்த் தொட்டியில் ஏற்படும் தீயை பொது மக்களே சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படையினர் வருவதற்குள் அணைத்துவிட்டனர்.

இன்று வரை இவ்வகையான சிறிய தீ சம்பவங்களால் யாருக்கும் காயம் ஏற்பட்டதாக செய்தி இல்லை.

**(4) எதற்கு குப்பை குழாய்த் தொட்டியில் ஏற்படும் தீயை அணைக்க நான் உதவ தேவை உள்ளது?**

ஆண்டுக்கு, சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படை 1000க்கும் அதிகமான குப்பை குழாய்த் தொட்டி தீச் சம்பவங்களுக்கு சென்றனர். இவ்வகையான தீ மிக சிறியவை என்பதால் பொது மக்களே எளிதாக அணைத்துவிடலாம். இவ்வாறு செய்வது **குறைபடயிருக்கும் சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படையின் (SCDF) வளத்தை விடுவி த்து, உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எங்களால்** உதவ முடியும்.

**(5) குப்பை குழாய்த் தொட்டியில் ஏற்பட்ட தீ அணைந்துவிட்டது என்று எப்படி எனக்குத் தெரியும்?**

குப்பை குழாய்த் தொட்டியில் வாயில் இருந்து புகை வருவது நின்றுவிட்டால் தீ அணைந்துவிட்டது என தெரிந்து கொள்ளலாம்.

**(6) குப்பை குழாய்த் தொட்டியில் ஏற்படும் தீயை தடுக்க முடியுமா?**

குப்பை குழாய்த் தொட்டியில் சாயம், மண்ணெண்ணெய் அல்லது அணைக்கப்படாத தணல் மற்றும் சிகரெட்டு துண்டுகள் போன்ற **தீப்பற்றக்கூடிய பொருள்களைப் போடாமல் இருப்பதன் மூலம்** இவ்வகை தீ ஏற்படாமல் தடுக்கலாம்.